# அப்துல் கலாம் அவர்கள் கண்ட இந்தியா

By C.K. Subramaniam

கனவு காணுங்கள் என்று அப்துல் கலாம் கூற மகாகவி பாரதியார் கனவு மெய்ப்பட வேண்டும் என்று கூறினார். காலங்கள் கடந்து விட்டது கனாக்களும் கவிதைகளாக கலந்து விட்டது. தலை சிறந்த விஞ்ஞானியும், மகாகவியின் ஊக்கம் கண்டிப்பாக இன்றைய தலைமுறை நிறைவேற்றும். அந்த தலைசிறந்த ஆற்றல் அக்னிகுஞ்சு போல் இருக்கும் புதிய தலைமுறை மக்களுக்கு கண்டிப்பாக இருக்கும். இதற்கு எவ்வளவு சந்தேகமும் வேண்டாம்.

என்னென்னவெல்லாம் கனவு கண்டார்களோ அவைகளை மெய்ப்பிப்பார்கள். கனவு கண்டதை மெய்ப்பிக்க வேண்டும் இதுதான் நமது நம்பிக்கை. நாம் அனைவருக்கும் ஒரே மாதிரி திறமை இல்லாமல் இருக்கலாம். ஆனால் அனைவருக்கும் திறமை வளர்த்துக் கொள்ள ஒரே மாதிரி வாய்ப்புக்கள் உள்ளன. அப்துல் கலாம் கண்ட எதிர்காலமும் இதுதான். இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்கும் வரலாற்றின் பக்கங்களில் ஒரு பக்கம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் அந்த பக்கத்தை இந்த உலகமே படிக்க வைப்பது நம் கையில்தான் உள்ளது.

நமது பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம்
ஆனால் இறப்பு ஒரு சரித்திரமாக இருக்கவேண்டும்.
நமது வாழ்க்கை வாழுவதற்கே அதுவும் வெற்றிகரமான
வாழ்க்கை வாழுவதற்கே வழி வகுக்க வேண்டும். இதில்
நம் தன்னம்பிக்கை நம்மை முயற்சியில் ஈடுபட
ஊக்குவிக்கும்.

அழகைப்பற்றி கனவு காணக்கூடாது, நம் அறிவை
வளர்ப்பதில் என்றும் தீவிரமாக இருக்கவேண்டும்.
அழகு நம் கடமையை பாழாக்கிவிடும். அறிவுதான்
நமக்கு காலம் கடந்த வாழ்க்கை வாழ வைக்கவசம்
இருக்கும். நம் கடமையைப் பற்றி கனவு காணவேண்டும்.
அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும் என்று
கலாம் கூறிய கருத்து நினைவுகூரவேண்டும்.

காலம் கடந்த விஞ்ஞான உலகத்தில் நாம்
மேலும் மேலும் முன்னேற வேண்டும். உலகளவில்
வெற்றி அடைந்த நாம் எவருக்கும் பின் தங்கியவர்கள்
இல்லை என்பதை நிருபிக்க வேண்டும். வாழ்க்கையில்
கனவு காணுங்கள் அந்த கனவு மெய்ப்படவேண்டும்
என்று பகலும் இரவுமாக சுயமுயற்சியுடன்
பாடுபட வேண்டும்.
காலம் வெல்லும் அதிசயங்களையும், அறிவு
களஞ்சியங்களையும் அடையும் வெற்றி
வாய்ப்புக்கள் நம்மை தானாகவந்து அடையும்.
அந்த மாதிரி கனவுகள் தூக்கத்தில் காண்பது
அல்ல. உன்னைத் தூங்கவிடாமல் பண்ணுவது
எதுவோ அதுதான் இலட்சிய கனவு.

நம்முடைய உண்மையான உழைப்பு நம்மை உயரத்துக்குக் கொண்டு செல்லும். நாம் வேலை செய்யும் இடத்தில் கொடுக்கும் ஊக்கம் நாட்டுக்கு பலன் தரும். நமது நிறுவனம் சிறப்பாக இருந்தால் நம் மாநிலம் உயரும். நம் மாநிலம் உயர்ந்தால், நமது நாடு வளமான நாடாகப் பரிணமிக்கும். நாம் உழைத்து நம் இந்திய நாட்டை உயர்த்துவோம்.

முன்னோக்கிய பாதையிலே சென்று மேலும் மேலும் முன்னேற்முயற்ச்சி செய்து பாடுபடுவோம். நாம் எதிர் பார்ப்பது ஏய்க்குவி வந்தானம் அல்ல. வளர்ச்சிப் பாதையில் செல்ல நம் முழு முயற்சியும் ஊக்கமும் செலுத்தி பாடுபடுவோம்.

இந்தியா ஒரு முன்னேற்றப் பாதையில் செல்லும் நாடு என்பதை மறக்கக் கூடாது. ஆர்வமும் அறிவும் நம்மை ஊக்குவிக்கும், நமது கனவை நினைவாக்கும்.

இந்தக் கரோனா காலத்தில் கண்ணைமூடாதே, அது உன்னை கொன்று விடும். கண்ணும் கருத்துமாக காரியத்தைக் கைகூட பாடுபடுவோம். நாம் கண்ட லட்சியமும் அதுதான். காலத்தை வெல்வோம் காரியமும் கைகூடி வரும். நாம் சிக்கல்களை எதிர்கொள்ளும்போது நமது சில திறமைகள் வெளிப்படுகின்றன. நாம் வாய்ப்புக்காக காத்திராதே வாய்ப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். நமது குறுகிய மனப் பான்மையை கைவிட்டு உலகத்தை உற்று பார்த்து நமது திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சந்தர்ப்பம் வந்தால் நழுவ விடக்கூடாது. ஒரு முறை வந்தால் அது கனவு. இருமுறை வந்தால் அது ஆசை. பலமுறை வந்தால் அது லட்சியம். அந்த இலட்சியத்தை அடையமுயற்சிகளை விடாமல் பாடுபடுவோம்.

அப்துல் கலாம் கண்ட கனவு நமக்கு ஒரு முன்னோடியாக இருக்கட்டும். ஓடி ஓடி உழைக்க வேண்டும் வாழ்க்கையில் முழுவெற்றி பெற வேண்டுமெனில். ஊக்கத்தை வளர்த்து ஆக்கத்தைப் பெருக்கி, அப்துல் கலாம் கண்ட கனவை நினைவாக்குங்கள். வெற்றி கொடி நாட்டுங்கள்.

C.K. Subramaniam, LM NO 547
A-8- Millennium Towers.
Flat NO 5, First Floor
Sector 9, Sanpada,
Navi Mumbai
PIN 400703
Mob 7977825401